
உ

சிவமயம்



# உகந்தை மலை ஸ்ரீ முருகன்

## அருட் பாமாலை

ஆக்கம்:

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# உகந்தைமலை முருகன்


# அருட்பாமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஓம் கணேசாய நமக

## காப்பு

திருச்சிற்றம்பலம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற்சார்வார் தமக்கு.

# உகந்தைமலை ஸ்ரீ முருகன் அருட்பாமாலை

ஆக்கம் :

புலவர் நாகமணி விநாயகமூர்த்தி

சேனைக்குடியிருப்பு
15.05.2014

விலை : 130/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருப்புகழ்

அகரமும் ஆகி அதிபனும் ஆகி
அதிகமும் ஆகி - அகமாகி
அயன் என ஆகி அரிஎன ஆகி
அரன் என ஆகி - அவர் மேலாய்
சிகரமும் ஆகி எவைகளும் ஆகி
இனிமையும் ஆகி - வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனது முன் ஓடி - வரவேணும்
மகபதி ஆகி மருவும் வலாரி
மகிழ் களி கூரும் - வடிவோனே
வனம் உறை வேடன் அருளிய பூசை
மகிழ் கதிர் காமம் - உடையோனே
செக கண சேகு தகுதிமி தோதி
திமி என ஆடு - மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலை மிசை மேவு - பெருமானை.

கோல மறை யொத்த மாலை தனி லுற்ற
கோரமதன் விட்ட - கணையாலே
கோதிலத ருக்கள் மேவு பொழி லுற்ற
கோகில மிகுந்த - குரலாலே
ஆலமென விட்டு வீசுகலை பற்றி
ஆரழ லிறைக்கும் - நிலவாலே
ஆவிதனர் லுற்று வாடுமெனை நித்தம்
ஆசை கொட ணைக்க - வரவேணும்
நாலு மறை கற்ற நான்முக னுதித்த
நாரணனு மெச்சு - மருகோனே
நாவலர் மதிக்க வேல்தனை யெடுத்து
நாக மற விட்ட - மயில்வீரா
சேலெனும் விழிச்சி வேடுவர் சிறுக்கி
சீரணி தனத்தில் - அணைவோனே
சீதவயல் அற்று நாவல் தனி லுற்ற
தேவர் சிறை மீட்ட - பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# திரு முருகன் திரு அகவல்

## துதி

**பருகு செந்தமிழ் பண்டிதன் மீதில் யான்**
**உருகி உள்ளத் திருத்தி அனுதினம்**
**முருகன் அகவல் முன்மொழி ஐங்கரப்**
**பெருகு வயிற்றுப் பிள்ளையின் தாள்துணை.**

## அகவல்

அய்யனே அறுமுகா அருகினில் வாவா
மெய்யனே உன் புகழ் விளம்பிட எனக்கு
ஐய்யமதகற்றி அன்பு தந்தாள்வாய்
துய்யனே கைவேல் சுடர் போலெழுந்து
வையகம் போற்ற வாவா முருகா
அகத்தில் நெஞ்சில் அன்போடிருந்து
சிவத்தின் கதிரே சேயோன் அருள்தா
எம் குலத்தின் கொழுந்தே குகனே அடியேன்
பவத்தின் மனதைப் பதியாதகற்றி
தவத்தில் இருக்கச் கண்முகா அருள்தா
தியான நிஷ்டையில் சேர்பிங்கலையில்
இடை கலை நாசினியின் இரண்டின் நடுவே
ஓங்கி எழுந்திடு ஓம் எனும் பிரணவம்
தாங்கிய வடிவே சரவண பவாயா
பவனொளி பவாயா பாலகா வேலவா
தாரகா சூரனை சமரினில் கொன்றவா
கோலகா மயில் வரு கோழிக் கொடியனே
சீலனே செந்திவளர் தெய்வானை லோலனே
மாலனே மாயோன் மருகனே வள்ளியுடன்
மஞ்சள் நீராடியே மகிழ்ந்தவா உகந்தையில்
தென் கதிரை வாசனே தேவர் சிறைமீட்டவா
தயான சிவசக்தி தந்த வேலாயுதா
தீராத வெந்நோய்கள் தீர்த்துவிடு அப்பனே
சுப்பனே சோதியே கர்ப்பூரவாசனே.
எப்போதும் உனது புகழ் செப்பிட எந்நாவில்
நிற்க அருள் செய்குவாய் நிர்மல ரூபனே
தர்க்கமிடு வள்ளிக்கு சந்நியாசி ஆனவா
மிக்கவரு வேடரெதிர் வேங்கை மரமானவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கான அவ்வைக்கு பழம் பல கொடுத்தவா
தூங்கி எழு சூரனை தாங்கு மயிலாகவே
வாகனமதாக்கியே வான்மீது சென்றவா
சென்றவா திருப்பரம் குன்று தோறாடிவரு
தேவாதி தேவனே இராச கெம்பீரனே
முத்தமிழ் தெய்வமே மூவிரு முகத்தனே
சித்தர்கள் போற்றிடு தில்லை வேலாயுதா
அத்தனே அடியேன் முன் அன்புடன் எழுந்துவா
சுற்றிவரு கோள்களின் துணை கொண்ட ராசனே
எத்திவரு இடும்பனை இணைகொண்டு வருகுவாய்
வருகுவாய் வடிவேலா மரகத எழிலோடு
பழனி மலை தாண்டியே பாங்குடன் எழுந்துவா
கழுகு மலை தனிலுறை கந்தவேள் எங்களை
அணுகிவரு எமனும் ஏவலும் இடர்களும்
சூனியப்பேய்களும் தொல்லை தரு சாத்தானும்
காத்தணுவு கண்ணூறு காமாலைக் காய்ச்சலும்
வீர வேல் கைகொண்டு விரட்டியபடி அப்பனே
துணிவு கொண்டடியேன் தொழுது பணிந்திட
கனிவுடன் கண்பார் களுதாவளை அப்பனே
மனையிலும் வளியிலும் மாற்றான் தன் எதிரிலும்
நினைத்திட முன்னெழு நின்மய ரூபனே
ஆனையுடன் கரடியும் அரவுபுலி மிருகமும்
தானெதிர்ப்படாமலே சண்முகதிருப்பிடு
நல்லை நகர் நாதனே தொல்லை வினை போக்கிடு
கல்லினில் ஒளிதந்த கண்கண்ட தெய்வமே
ஆண்டியாய் ஆன அழகேசா உந்தனை
வேண்டிப்பணிந்திட வினைகள் பல தீருமே
குட்டுண்டு பிரமாவை கொண்டு சிறை வைத்தவா
நிஷ்ட அறுகோணத்தில் நின்று நடமிட்டவா
சிஷ்ட பரிபாலனே சிங்கார குமரனே
கலியுகத் தெய்வமே காட்சிதர வேணுமே
மயில் ஏறி ஆடிவரு மண்டூருக் கந்தனே
துயில் கொள்ளும் நேரமதில் துணையாய் இருந்திடு
திருக்கோயில் தனிலுறையும் சித்திர வேலாயுதா
திருநீறு தானணியும் சிவசுப்பிரமணியனே
வெருகலம் பதியிலுறை வேலாயுதக் கடவுளே
அருகாக வந்தெமக் காறுதல் தந்திடு
பருகு தமிழ் பாவெனும் பக்தி கொண்ட கவலை
பாடியே பாராயணம் செய்த அடியார்களை
காத்திடு கந்தா கடம்பா இடும்பவா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடம் புரி திலோத்தமை நட்டுவங்களும்
கிங்கிணி ஆர்ப்பவே சங்கொலி முழங்கவே
கிரணகிரி ஆடிட அடியவர்கள் பாடிட
அரோகராப் போடவே அறுமுகா வருகவே
பரமனிட பாலனே பாவி எமைக் காருமே
அருணகிரி நாவிலே அமிர்தம் கொடுத்தவா
கருணையங் கடலே கரிமுகற்கிளையவா
குமர வேற்கடவுளே குழந்தை எனைக்காக்கவா
அமரர்கள் இடர் தீர்த்த அப்பனே சண்முகா
திகழ்பெரிய தேவனே செந்தமிழ்த் தெய்வமே
அழகனே ஐங்கரா கணநாதன் சகோதரா
பழமுதிர் சோலைவாழ் பார்பதி புத்திரா
குழகனே கோலமயிலேறு குமரனே
எங்கள் குலதெய்வமே திங்களொளிவானவா
தங்கமுகமாறுமாய் இங்கெழுந்தருள்புரி
இளநகை வள்ளியின் இனிய மணவாளனே
ஒயிலான தெய்வானை யோடுறவாடும் தெய்வமே
பயில்கின்ற கலைகளில் உன் பார்வைகொடு தந்தையே
முந்தை வினை எந்தனை முத்தொடராமலே
உந்தனை நம்பினேன் உகந்தை மலைவாசனே
வந்தாடும் மாமயில் வாசனே நேசனே
கந்தா கடம்பா இடும்பா எனையாளவா
இதுவேளை இத்தருணம் எதிரேறு முருகனே
அறுஅறுவேல்விடு தடையற முறிபட
விடுவிடு வெட்டற கட்டறப் பொடிபட
அட்டமா சித்தும் என் ஆணையில் நிற்கவே
அப்பனே சண்முகா அறுமுகா வருகவே
திருமாலின் மருகனே சீக்கிரம் ஓடி வா
தேடிவா நாடிவா சேவல் கொடி கூவிவா
ஆடிவா மயிலது அம்மை இருபேரும்வா
காணவா வேலே கந்தா என்கருத்தில் வா
பேணவா பணியவா பெற்றதாய் உமையும் வா
மாலும் வா அரனும்வா மாமேரு உறைவோய் வா
வேலும் வா வந்து விரைவுடன் ஒளியும் தா
நாணியுமைப் போற்றினேன் நாதா நின்சரணமே
சரணமே சரணமே சரவணபவாயனே
போற்றினேன் அப்பனே உன் பொன்னடி போற்றினேன்
சரணம் சரணம் சரவணபவ ஓம் சரணம்

சுபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## துதி

**செல்லக் கணபதிதன் திருப்பாதம் தாம் நினைந்து**
**நல்ல அருட்பத்து மாலைநா முரைக்க - வல்லவை தன்**
**சிந்திக்க சித்தியருள் சிவன் உமை புத்திரனே**
**பக்தி கொண்டு உன் தாழ் பணிகின்றேன்.**

## மணி மாலை

01) பரனார் சிவ உமையின் பதியே உனையே
பலகால் துதித்து வணங்கி
அதனால் எனது அகமாய்கை தீர
அபயம் அளித்து எனையாள்
உதவாத நீடு உடம்பை எடுத்த
உணர்வாளன் ஏது செய்வேன்
நிதம் வாடை வீசும் அருட் சோதிமலையே
நிலைகொண்ட உகந்தை மலையே.

02) உனைக்கதி என்று நம்பிவளி நடையாய் நடந்து
கவலை அடைந்து பெரிதாய்
உருகிமேல் வேர்வை பனிபோல் வடிய
உளமே அழுது முருகா
நிணல் தாங்கி நின்று உன் மலைகண்டு வெம்மி
நிதம் வாடி வருகு மென்னை
குணங்கொண்டளைத்து குமரா நீ எதிரே
வரவேணும் உகந்தை மணியே

03) பெண்டீரும் மக்கள் பெரும் காணிவீடு
பெரிதென்று எண்ணி நடந்தேன்
உண்டி சுருக்கி வாய்கட்டி வாழ்ந்து
உணவை ஒறுத்து பலகால்
அண்டினோர் தம்மை அவமானம் செய்த
அனியாய பாவி முருகா
குன்றும் சுனையும் என்றும் அளியாத கிரி
குமரா உன் உகந்தை மலையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04) மனமீது ஆசை குடியாய் இருந்து
மதுவில் மயங்கி நடந்து
தினமாதரோடு உறவாய் உளன்று
தியங்கித் தயங்கிக் கிடந்தே
சிவஅடியாரை எள்ளி வசை பாடி நித்தம்
அனியாயம் செய்தேன் பலநாள்
இனியாரும் என்னை மதியார்கள் ஐயா - நீ
வரவேணும் உகந்தை மணியே.

05) இருதாழ் இடற தடுமாறக் கால்கள்
எனையும் வருத்தல் முறையோ
முருகா குறத்தி மருகா கதிரை
வளரும் ஒளியை மறவேன்
திருவே உகந்தை மலை வாழும் முருகா
சிறியேனை ஆள்தல் பெரிதோ
வளியே நடந்து விழிகண்டு போற்ற - நீ
வரவேணும் உகந்தை மணியே.

06) சுமையும் தலைமேல் தோள் மீதடப்பை
தூக்கி முருகா நடையாய்
அமைவாக நல்ல அடியா ருடனே
அடியேனும் பாடிவருவேன்
வடிவாய் உனது மலர் தாழ்வணங்க
வரமும் எமக்கு அருளே
பிடி தெய்வயானை பெரும் வள்ளிபங்கா - நீ
வரவேணும் உகந்தை மணியே.

07) ஆராரோ என்மேல் அவமானம் செய்தார்
அதனாலும் மனம் தளர்கிலேன்
ஊரார் வெறுத்தார் உறவோர் பகைத்தார்
உதவோர் கலைந்தார் எனையும்
மாறாக தாறு வசை பாடுகின்றார்
மறைவாக நின்று சிலபேர்
ஆறாது மாறு முகமோடு காண - நீ
வரவேணும் உகந்தை மணியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08) அப்பா உன்நாமம் அசையாது நாளில்
அரன் போல நிற்க அருள்தா
எப்போதும் உன்னை நினைந்து யான் போற்ற
நல் இதயம் இருக்க அருள்தா
தப்பு பலசெய்த கரங்கள் இரண்டு மினி
தவறொன்றும் செய்யாதருளே
நட்பான தோகை மயில் மீதிலேறி - நீ
வரவேணும் உகந்தை மணியே.

09) மனையாள் இருந்தென்ன மக்கள் பொருள் இருந்தென்ன
மற்றும் மனை காணிவீடு
இணையாய் இருந்தென்ன என்னுயிர் விடும்போடு
இவைகளும் கூட வருமோ
அணையாசோதி உன் அடிகண்டு போற்ற
இவ்வடிமையை வைத்துகொண்ணாதோ
இணைவாய் மயில்மேல் இரு - மாதரோடு நீ
வரவேணும் உகந்தை வடிவே.

10) தனமே குவித்து அதன்மேல் படுத்துஒரு
தருமம் செய்யாத பாவி
கருமம் பலகால் கயமை சிலகால்
கடும் ஏளைக் கீயாத நான்
விடாது அயல் பூமி அருகால் சுரண்டி
மென்மேலும் சேர்த்த கயவன்
அடாது என இயமன் கொடு போகமுன்னம் - நீ
வரவேணும் உகந்தை மணியே.

11) திருவே உனது திரு நீறு தன்னைத்
தினமும் அணியாத மூடன்
மலர்தாழ் பறித்து வலம் வந்து கோயில்
வணங்கிப் பணியாத நான்
ஒரு நாளில் ஏனும் முருகாஎன வாயால்
ஓதாத மடைய னையா
திருமாது தெய்வ வலமாக வள்ளியுடன் - நீ
வரவேணும் உகந்தை மணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) உதவாச் சரீரம் ஒன்பது வாசல்
ஒளுகுநீர் மலவாயல்வீடு
காற்றால் அடைத்த வீட்டைப் பலகால்
கழுவித் துடைத்து மினுக்கி
போற்றப் புடமை நாற்றச் சடலமதை
புவிமீது சுமந்து வாழ்ந்தேன் எமன்
ஏற்றி இழுத்துக் கொடு போக முன்னம் - நீ
வரவேணும் உகந்தை மணியே.

13) உன் தலத்தில் பலகால் நடத்திக் கிடக்க
தளராத உறுதி தருவாய்
பரத்தையிடத்தில் மனத்தை விடாது
பணிய உன் அன்பு தருவாய்
மனத்தில் இருத்தி துதித்தே அழைக்க
மகிழ்வோடு ஓடிவருவாய்
இனத்தின் தலைவா குறத்திக் கணவா - நீ
வரவேணும் உகந்தை மணியே.

14) அப்பா உனது ஆலயம் சுற்ற
அருநோய்கள் தீர அருள்வாய்
எப்போதும் உந்தன் சடாச்சர மந்திரம்
என்னாவில் நிற்க அருள்தா
சுப்பா உன் சோதி அருள்வீசும் மலைமேல்
சுடர் காண விழிக் கருளுவாய்
நற்பான தோகை மயில்மீதேறி - நீ
வரவேணும் உகந்தை மணியே.

15) முருகா உனது இருதாழ் பிடித்தேன்
முறையிட்டு குறை உரைத்தேன்
மருகா இவ்வடிமை மறவாது நித்தம்
மலர் கொண்டு அட்சிக்கவோ
திருமால் மருகா என் உளமே மகிழ
உன் திருப்பார்வை அது போதுமே
தினம் போற்றும் அடியார் மகிழ்கின்ற கனியே
வரவேணும் உகந்தை மணியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## துதி

**குஞ்சரக் கன்றே குணமா மணிஅழகே**
**வஞ்ச மற்ற நெஞ்சுறையும் வளர்மதியே - அஞ்சுகனே**
**அஞ்சலிட்டு அருட் பத்து அறுமுகனார் மேல்பாட**
**செஞ்சடையேன் புத்திரனை சித்தி அருள்.**

## மாலை

01) அரகரா வென்றனு தினமும் பணிந்து நின்றேன்
ஆருயிர் சென்றணைத்து முகம் ஆறுள்ளானைக்
சிரநடுவில் இருபதமும் திருந்தி நாட்டிச்
சிவாய உயிர் ஓங்காரத் தீப மேற்றி
பரவெளியின் ஒளிமதிபோல் பரவி சூழப்
பங்கய பூங் உகந்தை மலையாளன் எங்கள்
குருபரனை அமரர் தொழும் குமர வேளைக்
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.

02) சீரெட்டுக் கெட்டாத கலைக்குள்ளானைச்
சிற்பரனைச் சிற்பத்தில் நடஞ்செய்வானை
ஓரெட்டாய் நின்ற கதிர் காமத்தானைக்
ஒருமுகவன் அறுமுகனை ஒளிக்குள்ளானைச்
போரிட்ட சூரர்தமை புலன்கள் தம்மை
பொடிபடுத்தி நிலை நிறுத்தும் புகளினானைக்
கூறிட்டு உகந்தை மலைக் குமர வேளைக்
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.

03) சூரர்தமை துடுக் கடக்கி மாள் செய்தானை
சுந்தரஞ்சேர் சோலை மனை கிழவன் தன்னைக்
பார்புகளும் அறு படையுள் உறை வோன்தன்னை
பார்பதியின் மகனான செவ்வேள் தன்னைச்
கூர்போன்ற வேல்கையில் கொண்டோன் தன்னை
குருபரனை வெருகன் பதி ஆள்வோன் தன்னைக்
பிடிநீறிட்டு உகந்தை மலைக் குமர வேளைக்
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04) மாங்கனிக்காய் பழனி மலை ஓடினானைக்
வள்ளிதனைத் தினைப்புனத்தில் மருவினானை
தேன் தினைமா உண்ட கனி வாயிலானை
தேவர்துயர் தீர்த்த திருக்கோயிலானை
கூன் கிழவனாக உருக்கொண்டோன் தன்னை
குறவருக்காய் வேங்கை மரமாகினானை
பிடிநீறிட்டு உகந்தை மலைக் குமரன் தன்னை
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.

05) மின்னனையான் தெய்வானைக் குகந்தோன் தன்னைக்
வீராதி வீரனெனும் விண்ணோன் தன்னை
அன்னையர்கள் அறுவர் தங்கள் அர்ச்சிப்பானை
அழகு மயில் ஏறிவரு அழகேசன் எங்கள்
கன்னல் பொழி சென்னல் வினை திருக்கோயிலானை
கருதுவோர் கசடறுத்து காப்பாற்றுவானை
பிடிநீறிட்டு உகந்தை மலைக் குமர வேளைக்
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.

06) மீன்மகர மாகினோன் திருச் செந்தூரானைக்
வீறுகொண்ட அசுரர் படை மாள் செய்தானைச்
தாழ் பரவுவார் நெஞ்சில் தங்கினானைக்
சகலகலை பொருளுக்கும் உள் நின்றான்தன்னை
மாள்சூரன் சிரமழிய வேல்விட்டானை
மண்டூரில் வாழ் தங்க வேலோன் தன்னை
பிடிநீறிட்டு உகந்தை மலைக் குமர வேளைக்
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.

07) முத்தமிழக் குரியவனை மூப்பில்லானைக்
முதுமையிலாப் பேரழகு உடையோன்தன்னை
எத்திசையும் அருள் பரப்பும் இளையோன் தன்னை
எங்கள் குல முன்னவனை இறஞ்சி நித்தம்
பக்தி கொண்டு பணிவோர்க்கு அருள் பாலிப்பானை
பார்போற்றும் நல்லை நகர் பதியுள்ளானைக்
பிடிநீறிட்டு உகந்தை மலைக் குமர வேளைக்
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08) தந்தையர்க்கு குருவாகி நின்றோன் தன்னைக்
தணிகையொடு சுவாமிமலை குடிகொண்டானைக்
வந்தித்து வருந்துவார் வாழ்விப்பானை
மாதாவின் திருக்கரத்தில் மகிழ்கொண்டானை
அந்தி பகல் நினைந்துருகும் அன்பர் தம்மை
அரவணைத்து அருள்கொடுக்கும் அப்பன்தன்னை
பிடிநீறிட்டு உகந்தை மலைக் குமர வேளைக்
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.

09) கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் தன்னை
கதிரை மலை வாழ்குகனை வள்ளி மானை
பயங் காட்டி அண்ணர் தனை அளைத்து மானைப்
பங்கயனை ஐங்கரனின் தம்பி தன்னை
அயன் மாலின் மருகோனைத் தேவகோனை
ஆதவன் தன் ஒளி போன்ற மேனியானை
பிடிநீறிட்டு உகந்தை மலைக் குமர வேலைக்
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.

10) வாகூர மலை பிளந்த வடிவேல் தன்னைத்
வன்சூரர் சங்காரம் செய்து வெற்றிக்
நாவல் நல்சடை நாவல் பதியில் தங்கி
நல்ல சஸ்டி விரதத்தில் உள்நிற்பானை
பேதங்கள் தான் கடந்த பெருமான் தன்னை
பெரும் புகழாம் திருப்புகழின் அருளுண்டானை
பிடிநீறிட்டு உகந்தை மலைக் குமர வேளைக்
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.

11) அருணகிரி நாவினிற் கோர் முத்திட்டானை
அவ்வையர்க்கு சுட்ட கனி அளித்துள்ளோனை
கருணை தரு தாந்தாமலை கடந்து நல்லூர்
கழுகுமலை வேலவனைக் கதிர் ரொழிக்கும்
சிகரமொடு கோபுரத்தான் சித்தாண்டியானை
திருச்செந்தூர் முருகனெனும் நாமத்தானை
பிடிநீறிட்டு உகந்தை மலைக் குமர என்று
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) அடியவர்க்கு அருள் கருணை கொடுத்தணைத்து
அமையொடு உகந்தை மலையாள் வோன்தன்னை
பிடி குறத்தி தினைப்புனத்தில் வேடனாகித்
பின்செட்டி உருமாறி கிழவனாகித்
தடிகொண்டு தள்ளாடி வள்ளி மானைத்
தானணைத்து ஒளிகாட்டி சேர்ந்தோன்தன்னை
பிடிநீறிட்டு உகந்தை மலைக் குமர வேளைக்
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.

13) கானமயில் ஏறி வரு கடவுள் தன்னைக் கொடும்
காலனையும் தடுத்தாளும் கடம்பன்தன்னை
ஞானத்தால் நம்புவர்க்கு நடுவில் நின்று
நாதாந்த செந்தமிழின் வேந்தன் தன்னைத்
வேதத்தில் அழியாத வெண் நீறதனை நம்
மெய்யிட்டு அணிந்து சிவசிவனே என்று
பிடிநீறிட்டு உகந்தை மலைக் குமர வேளைக்
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.

14) தேவர்க்கு மேலான தேவ கோனைச்
திருப்பழனி கோபுரதுள் சேர்ந்துள்ளோனைச்
மாதவரும் யாதவரும் மண்ணுள்ளோரும்
மதிக்கின்ற செங்கண்ணன் மருகவேளை
சீத வயல் அருள் பொழியும் செல்வச் சந்நிதி
சின்மயனை மன்னவனை நிறுத்தி நெஞ்சில்
பிடிநீறிட்டு உகந்தை மலைக் குமர வேளைக்
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.

15) நம்பினர்க்கும் வெம்பி அழு நலிவுற்றோர்க்கும்
நடுநின்று அபயகரம் நீட்டியாளும்
தும்பி முகன் சோதரனை சொக்கருக்கு
சொல்லரிய பிரணவத்தை உபதேசித்தானை
அம்பிகையின் அருள் பதித்த வேலுண்டானை
அழகு பொழி உகந்தை பதி ஆள்வோன் தன்னை
பிடிநீறிட்டு முருகா குமரா கந்தா வென்று
கும்பிட்டேன் என் பிறவி பின்விட்டேனே.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருத்தம்

01) நாவலின் கீழ் உறையும் நயன கணேசனே
நம்பினேன் வேழமுகனே
வேளைக்கு வந்துதவு விக்கின வினாயகா உகந்தை
வேலவர் புகழ் பாடலே
வேண்டினேன் கஜமுகா தாண்டியடி அப்பனே
விரைவுடன் ஆடிவருவாய்
வித்தகா மத்தள குக்குட வயிறனே
இக்கவிக் கெதிர் நிற்கவா
உத்தமி புதல்வனே ரெத்தின மகிடனே
ஓங்கார முக அழகனே
ஒருமாங்கனி வேண்டி தாய்தந்தை வலம்வந்த
ஒளியருள் ஐந்து கரனே
சீருடன் இரு மூன்று விருத்தப்பா பாடிட
சிறப்புடன் அருள் புரிவாய்
சிவ சிவா வாலை அருள் நமோ நடன கணேச
சித்தியருள் பிள்ளையாரே.

02) சோலை தனில் வாழும் என் சுந்தரக் கடவுளே
சோதனை ஏன் வேல்முருகனே
வாதனையும் வஞ்சமும் வல்பிணி நோய்களும்
வந்தெமைத் தினம் வாட்டுதே
ஆரையா உனைவிட்டால் எனைத் தூக்கி நிறுத்துவார்
அகிலத்தில் ஒருவதில்லை
அமைதரு உகந்தை மலை ஆள்கின்ற தெய்வமே
ஆறுமுக மானகுருவே
சுமை தலையில் பாரமும் வளிநடையில் தாகமும்
சுழல் காற்றின் வலு வேகமும்
சுந்தரா சிவகாமி மைந்தனே அடியேனைச்
சோதிப்ப தழகு தானோ
சோதியாய் மலைமீது அருளொளி புரிகின்ற
சுடர் தங்க வேலழகனே
துதிப்பவர்க் கென்னாளும் இடர்வரா தருள்புரி
சுவாமியே உகந்தை குருவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) தடி அடிதே என் கால்விரல் நோகுதே
தள்ளாடி விழும் நிலமை யோ
அடிஎடு தே மெள்ள நடையால் நடந்தாலும்
ஆறாத புண் நோகுதே
படிக்க நான் பாடல்களை நினைவில் எடுத்தாலும்
பலமான இளைப்பு குமரா
பருகிட நீரையும் குடித்திட எடுத்தாலும்
பல நோவு தொண்டைமுருகா
பாத நடையாகவே உன் தலம் வருகின்றேன்
பற்றின்றிச் சோதிக் கிறாய்
பாரெல்லாம் உன் புகழ் நிலையாக வீசுதே
பழனிமலை ஆண்ட முருகா
பத்தர்க்கு முத்தி நிதம் கொடுத்தருள் உகந்தைமலை
பதியாளும் வடி வேலனே
பண்ணவர் சகாயனே விண்ணவர் தலைவனே
பரமசிவ முருக வேளே.

04) திருமுருகா எனைக் கிரங் காதிருப்பதேன்
திரை மறைவில் இருப்பதாலோ
சேயனின் அழுகுரல் கேளாதிருப்பதேன்
தேவியரின் பாசத்திலோ
ஓயாது இரவு பகல் உன் நாமம் என்வாயால்
ஓதாத நாளில்லையே
உன்னடிமை ஐயனே எனைவிடுதல் நீதியோ
உன்தனற்கு அழகு தானோ
கன்னல் மொழி எந்தன் இரு தாய்மார்கள் அடியேனை
கண் பார்க்க மனமில்லையோ
காலையில் முகில்கண்டு ஆடிடும் மயில் கூட
என் கருத்ததை அறியாததோ
கைகொடிச் சேவலும் குமரா எதிர் நின்று
கலையாடிக் கூவிடாதோ
கண்கண்ட தெய்வமே உகந்தை மலைவாசனே
கருணை புரி சிறி முருகனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05) ஆலை நிணல் நாவலும் வேம்பு நிரை வீதியும்
அழகுடன் அணி சேர்க்குதே
அடியவர்கள் தங்கிட சுற்றி நல்மடங்களும்
அழியாத பணி சேர்க்கு தே
அன்ன கொடை தானமும் உன் புண்ணிய தலத்திலே
அனுதினம் நடந்தேறுதே
அழகு திருக் குமரனே உன் ஆலயம் வலம்வரின்
அவரவர்கள் குறை தீருதே
திகழ்கின்ற அருளொளி எதிர்கெண்டு அலைமோதும்
திருப்பாக் கடல் தோணிமலையும்
திரு மஞ்சல் துளி கண்டு மலை மீது அடிகண்டு
சிறுகல்லு நேர்த்தி யிடலாம்
தீராத நோய்களை தீர்த்திடும் சுணைநீரும்
தினம் சுற்றி ஆடிவரலாம்
திருமுருக தரிசனம் மயில் மீது காண்கின்ற
சிறிவள்ளி தேவ மலையே.

06) மலைமீது தவமாக இருந்தாலும் ஓரிரவில்
மகிழ்வொடு சித்தி பெறலாம்
சிலை மீது நின்று அருளொளி புரிகின்ற தேவியின்
திருமுகத் தருளு பெறலாம்
கலையாத கல்வியும் நிலையாக நிற்கவே
கருணை கிரி ஏறி தொழலாம்
கந்தனை நொந்து மன தன்போடு மலை சுற்ற
கடும் வினை நோய் போகலாம்
கயமை செய் சூரனின் சங்காரக் காட்சியை
காணக் கண் கோடி பெறுமே
கற்பகத் தம்பியின் செப்பமுடன் திருவுலாக்
காட்சியைக் காணல் பெரிதே
காரானை மாமுதற் கிளையோனை அறுமுகனை
கண்கண்ட தெய்வம் தனை
கருணை மலை அருள் புரியும் உகந்தை மலைவாசனே
கடவுளை கந்தவேளே.

சுபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

உகந்தைமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தான தர்மகர்த்தா

(வண்ணக்கர்)

# அமரர். புஞ்சிமாத்தையா முத்துபண்டா (குமார்)

அவர்களின் ஈராண்டு நினைவஞ்சலி

| மறைவு நாள்: | | நினைவு நாள்: |
|---|---|---|
| 1913 - 07 - 22 |  | 2017 - 07 - 22 |

## திதி வெண்பா

விஜய வருஷம் விண்ணவர்க் கோர் சோமவாரம்
ஆடி நல்மாசம் தமிழ் ஆறாம் திகதி திங்கள் அன்று
பூராட நட்சேத்திரம் புனித யோகம் வைகிருதி
பூரணை விரதத்தன்னாள் வண்ணக்கர் புகளுடலை விட்டனரே.

## நினைவஞ்சலி

தேவாதி தேவசிகாமணியே முருகனுக்கு நீங்கள்
ஏவல் புரிந்திடவோ இப்பிறவி எடுத்து வந்தீர்
தாமதியாது சடுதியியே எமைப்பிரிந்தீர் தர்மகர்த்தா
ஓராண்டு சென்றதையா உங்களை நாம் நினைவுறுகின்றோம்

உகந்தை மலையானுக்கே உங்களை நீ அர்ப்பணித்து
அவன் சேவை புரிவதற்கோ அல்லும் பகலும் உழைத்தீர்
இறையோடு கலந்த எங்கள் குமார் வண்ணக்கர் உங்கள்
மறை நாள் ஓராண்டை மன்னவனே நினைவுறுகின்றோம்.

பேதமற்ற கொள்கை பிடிப்புடைய உங்கள் மனம்
ஆதவன் போல் ஒளி போன்ற அழகு முகம் கோயில் எதிர்
நிற்கும் எழிலும் நிமிர்ந்த நடைஅழகும் அற்புதனே நீ பிரிந்து
ஓராண்டு கடந்ததையா உங்களை நாம் நினைவுறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாள குணமும் தந்தைபோல் அறவழியும்
தியாகனற் சிந்தையும் செவ்வேள் தன்னைச் - நிலையாக
அலையா மனதிருத்திஅவன் பணிக்கே வந்தாய் உனை நாங்கள்
மறைந்து உன் ஓராண்டை மனநெகிழ்ந்து நினைக்கின்றோம்.

தங்கள் மனை மக்கள் சகோதரர் உறவுகட்கும் அன்புடைய
திருப்பணியாளர் சிவகுருமாய் தொண்டரொடு பௌத்த மத
அடியார்கள்உகந்தைபதி அடிமிதித்தோர்அன்னமிட்ட அன்னையரும்
இணைந்து தங்கள் ஓராண்டை இத்தினத்தில் நினைவுறுகின்றோம்.

திருமுருகன் இணையே உன்திருத்தொண்டு புகழே போற்றி
அறப்பணி செய் உங்கள் ஆத்மா அவனருள் தலந்தாய் போற்றி
பரம் பொருளே உங்கள் பணி பன்னிரு கையனொடு
நிரந்தாய் அருள்தந்து நின் கருணை அருள் போற்றி போற்றி

உகந்தை மலை முருகனுடன் ஒன்றக் கலந்த மகான்
பரந்த நற்சேவைபாரி லிட்டாய் - நிரந்தரமாய்
கலந்தாயோ தேவருடன் காணுகின்றோம் அருள் ஒளி போல்
சிவன் பங்கில் உறைவோனே உன் திருவடி போற்றி போற்றி.

## தங்களின் ஓராண்டை

## நினைவுறும்
## அன்புள்ளங்கள்

புலவன்
நாகமணி விநாயகமூர்த்தி
சேனைக்குடியிருப்பு

தொண்டன்
சண்முகம் முத்துலிங்கம்
ஓந்தாச்சி மடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நீங்காத நினைவு

தாய்மடியில் :
07
-
09
-
1959



இறைவனடியில் :
02
-
04
-
2017

## திதிவெண்பா

எங்கள் தமிழ் துர்முகியாம் இருபதாம் நாள் பங்குனியாம்
ஞாயிறு பூர்வ பக்கம் சஸ்டி திதி சித்தம் சஸ்டி விரதத்தன்நாள்
மிருக சீரிட நட்சத்திரம் மேன்மையுறு காலையிலே
தங்கை அவள் புஸ்பவதி தரணி விட்டு மோட்சப்பதியானாள்

*********

அன்பினிக்கோர் தங்கை ஐவர் தமக் கிளையவளே
பண்பினோடு வாழ்ந்த பகை அற்ற நல்மனத்தாய்
செம்பினொடு தங்கம் சேர்ந்து ஒளிவிடுவது போல்
தன் கணவனோடு சேர்ந்து கதிர்பரப்பி வாழ்ந்தவளே

அன்புக்கிருவர் ஆசைக் கிருவருமாய் நான்கு
மக்கள் மனநிறைவு கொண்டு வாழ்ந்த தங்காய்
இன்பமொடு இல்லம் சிறக்க இனிது வாழ்ந்து
துன்பச் சுமை வென்னோய் துயரோடு வெற்றிகண்டாய்

தீர்த்தங்கள் ஆடத்திருக் கோயில் ஒன்றும் விட்டு வையாய்
ஒருவார்த்தை கொண்டு யாருக்கும் வசை பேசாய் அம்மா நீ
மாற்றோலா நோய் இருந்தும் மகளின் சிறப்பு கண்டாய்
ஆற்றொண்ணா தம்மா அரும் தங்கையரே உன்பிரிவு

தட்டிக் கழித்தாலும் தரிக்குமோ ஓர்நிமிடம்
விட்டு வைக்க அம்மா விடுவானோ காலனவன்
சென்றங்கு சிவபூசை சேவித்து திருமாலிடத்தில்
நன்றாக உன் ஆத்மா சேர நரகற்ற வாழ்வு கொடு நாராயணா.

*தங்கையை நினைவுறும்*

**அண்ணன் விநாயகமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானறியேன் வேல் முருகா


மெய்வாழ்வு தானென்று விரும்பும் இப்பூவுலகோர்
பொய்வாழ்வு தான் இந்தப் புகளுடம்பு மெய்யாக
உய்வதற்கு முன்னே உகந்தை மலை வேல்முருகா
ஐயா இவ்வடியேனை ஆண்டருளே.

சுற்றமுடன் சொந்தமும் சுகபோக வாழ்வு நிதம்
நித்தியமாய் நிரந்தான் என்றிருந்தேன் - அந்தகனும்
பற்றி எறிந்து பாசக் கயிறோடு போம் பொழுது
சுற்றங்கள் சொந்தம் தொடருமோ வேல் முருகா

கொண்டு வந்த தில்லை கொடு போவ தொன்றுமிலை
நின்று எப்பொருளும் நிலைத்ததில்லை - ஒன்று மட்டும்
மெய்யாலும் கையாலும் விரும்பி நாம் இட்டதர்மம்
உய்வதற்கு முன்னே ஓடிவந்து காத்திடுமே.

கட்டி அழுதாலும் கால் பிடித்து தெண்டனிட்டாலும்
விட்டு விடப் போறானோ காலனவன் தம் உயிரை
எழுத்து முடிவன்றி எதுவும் நம்விதிப்படியே
நடக்கும் கதிர்வேலா நம்புமெனை உன்பதம்தா

தேடும் திரவியமும் செல்வமுடன் நற்பொருளும்
மாடி மனைகளும் மாடுகண்டு காணிகளும் இவ்வூனவுடல்
ஆடி அடங்கி ஆக்கையிடும் போதினிலே
நாடி வருமோ நானறியேன் வேல்முருகா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலவர். நா. விநாயகமூர்த்தி அவர்களின் இதர வெளியீடுகள்

ஆக்க நூல்கள்:

| | |
|---|---|
| கதிர்காம முருகன் வளிநடைக் கும்மிப்பாடல் | - 135 |
| முத்தான முருகன் தோத்திரப்பாடல் | - 210 |
| திருப்புகழ் | - 250 |
| கந்தர் அனுபூதி கந்தர் அலங்காரம் | - 230 |
| கழுகு மலைப் பத்து | - 135 |
| திருக்கோயில் சித்திர வேலாயுதர் போற்றிப்பாமாலை | - 125 |
| வெருங்கல் பதியுறை வேலாயுதர் பாமாலை | - 130 |
| மண்டூர் முருகன் பவள மணிமாலை | - 125 |
| சிவசெந்திமாலை | - 80 |
| உகந்தை மலை ஸ்ரீ முருகன் அருட்பாமாலை | - 125 |

மேற்படி நூல்கள் தேவையானோர்
கீழவரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற முடியும்.

**ஈஸ்வரி இல்லம்**
**மாரியம்மன் கோயில் வீதி,**
**சேனைக்குடியிருப்பு-01B.**
077-6538667

கோல்டன் அச்சகம் - கல்முனை. 067-2223939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org